# MADURAI KAMARAJ UNIVERSITY

Palkalai Nagar, Madurai

## SRI SATHGURU SANGEETHA VIDYALAYAM

College of Music and Research Centre,Madurai

# NOTIFICATION

Ph.D.Public Viva - Voce Examination

| | |
|---|---|
| **Name of The Research Scholar** | **M.RAMESH BABU**<br>**Regn No. P 3233** |
| **Title of the Thesis** | **மிருதங்கம் தவில் ஓர் ஒப்பாய்வு** |
| **External Examiner** | **Dr.V.LAKSHMI ,M.A. ,M.Phil.,Ph.D.**<br>**Associate Professor in Music ,Dept . of Vocal**<br>**Kalaikaviri College of Fine Arts, Trichy.** |
| **Research Supervisor and Convenor** | **Dr.R.ARUNA ,M.MUS.,Ph.D**<br>**Principal -Retd**<br>**Sri Sathguru Sangeetha Vidyalayam**<br>**College of Music and Research Centre, Madurai.** |
| **Co Guide** | **Dr .V.BALA .M.Mus. Ph.D**<br>**Principal • Retd**<br>**Sri Sathguru Sangeetha Vidyalayam**<br>**College of Music and Research Centre, Madurai.** |
| **Co-ordinator** | **Dr. K.THIAGARAJAN, M.A., Ph.D.**<br>**Associate Professor in Music,**<br>**Sri Sathguru Sangeetha Vidyalayam**<br>**College of Music and Research Centre, Madurai .** |
| **Venue** | **Sri Sathguru Sangeetha Vidyalayam**<br>**College of Music and Research Centre, Madurai.** |
| **Date & Time** | **08.02.2023 (Wednesday) at 10.30 AM.** |

**I hereby cordially invite one and all for the occasion of Public Viva Voce to encourage and enlighten the Researcher. A copy of the thesis is available in the Library of the Research Centre and the synopsis of the thesis is also available in the website of the Research Centre, Sri Sathguru Sangeetha Vidyalayam, Madurai-2 for your reference.**

**Dr. R. ARUNA**
**Guide and Convenor**

**“மிருதங்கம் - தவில் ஓர் ஒப்பாய்வு” என்ற தலைப்பில் மேற்கொண்டு வரும் முனைவர் பட்ட ஆய்விற்கான ஆய்வுக்கட்டுரை சுருக்கம்.**

**முன்னுரை:**

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழில் இசை என்பது இயலுக்கும் நாடகத்திற்கும் பொதுவானதாக நடுவில் சொல்லப்பட்டுள்ளது. இயலில் இசையை பொருத்தி பாடல் புனையும் பொழுது அப்பாடல்கள் தன்னகத்தே லய அமைப்பை பெறுகின்றன. இந்த லயக் கூறுகள் வண்ணங்கள் என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் முதன்முதலில் சந்தங்களுடன் அமைந்துள்ளன. இதில் வாத்தியங்கள் தாளத்தின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்களில் தோற்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. இந்த வாத்தியங்கள் பற்றி பண்டைதமிழ் இலக்கியம் சொல்லி இருந்தாலும் திருவள்ளுவர் தோல் வாத்தியத்தை “அரை பறை அன்ன கயவா” என்று சித்தரிக்கிறார். அவைகளை இடக்கை, முழவு, படகம், கடிப்பு, ஒருகட்பறை, பேரிகை, சிறுபறை, திமிலை, தண்ணும்மை, குடப்பறை, ஒருகண் தருவாய்ப்பறை, கரடிப்பறை, குறிஞ்சிபறை, பாலைப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தல்பறை, உவகைப்பறை, உடுக்கை, நாகஸ்வரம், துருத்தி, முகவீணை, புஜங்கம், புல்லாங்குழல், டமாரம், டங்கா, ராஜவாத்தியம், தவளசங்கு, எக்காளம், திருச்சின்னம், தவண்டை முதலியவை தாளவாத்தியங்கள் என்று அபிதான சிந்தாமணி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்திகள் அனைத்தும் சில சங்கநூல்களில்

இருந்தும் பல பிற்கால இலக்கியங்களில் இருந்தும் தொகுக்கப்பட்டு இந்நூலில் எழுதப்பட்டுள்ளன. திமிலை என்ற வாத்தியமே பிற்காலத்தில் தவில் என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று குடந்தை இசையறிஞர் சுந்தரேசனார் குறிப்பிட்டுள்ளார். இந்த சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் அருணகிரிநாதரே ஆவார். தவில் எழும் ஓசை என்று குறிப்பிடும் போது அதனுடைய ஒலிக்குறிப்பை டிமுடு டிம் டிம் என்று உபயோகித்தும் எடுத்து காட்டியும் திருப்புகழில் விளக்கம் தந்துள்ளார். பண்டையகாலத்தில் கட்டிக் கொள்கிற ஆடையில் கரைகள் அமைக்கப்படுவது போல இசை ஒரு ஆடையாக கருதப்பட்டு பக்கவாத்தியங்கள் கரைபோல அழகு செய்தன என்று திருப்புகழ் ஆய்வாளர் முனைவர் அங்கையற்கண்ணி கூறி உள்ளார். இந்த தோற்கருவிகள் மக்களினுடைய மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும், துன்ப கால வாழ்க்கைக்கும் இறைவழிபாட்டிற்கும் ஏற்றபடி அமைக்கப்பட்டிருந்தன. மத்தளம் அல்லது தண்ணும்மை மகிழ்ச்சியாக இருக்கும்போது இசைக்கின்ற வாத்தியமாகும். அதுபோல பறை, துடி முதலிய கருவிகள் துன்பகாலத்தில் ஒலிக்கப்படுவன. இந்த வாத்தியங்கள் முழுவதும் பண்டைத் தமிழகத்தில் இன்பச்சுவையையும், துன்பச்சுவையையும் அறிவிக்கும் பண்களுக்கு துணையாக இருந்தன. பண்டைய மக்கள் இயல் இசையில் வல்லவராய் இருந்ததை பாணர் என்ற சொல்லால் அறியலாம். தோற்கருவிகளை பாணர்களின் இசைக்குத் தக்கவாறு இயக்கி வந்தனர் என்ற குறிப்பு கலித்தொகையில் காணப்படுகின்றது. வணிகர்கள் கூட்டத்தை கொள்ளையிட வந்த கள்வர்கள் தண்ணும்மையை முழக்கும் ஒலியை கேட்பாயாக என்ற குறிப்பு காணப்படுகின்றது.

அதே போல குறுந்தொகையிலும், தண்ணும்மை, முரசு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. ஆகவே, பண் எடுத்து பாடுபவர்களுடன் தாளத்திற்கு ஏற்ப தோற்கருவிகள் ஒலிக்கப்பட்டன. பாடுகின்ற பாணர்கள் இடை இடையே ஓய்வு கொள்வதற்கு இந்த தோல்கருவிகள் துணையாக இருந்தன. பண்ணும் பாணியும், ராகத்தையும், தாளத்தையும் குறிப்பன. தாளம் என்பது தாள் + அம் என்று பிரிந்து தாளமானது. தன்னுடைய உடம்பின் பெரும்பாகத்தை கால் தாங்கி இருப்பது போல பாணி பண்ணைத் தாங்கி உள்ளது என்று திருமுறையில் ஞானசம்பந்தர் குறித்திருக்கிறார். சிலம்பில் இடம்பெற்றுள்ள அரங்கேற்று காதை உரையில் தோற்கருவிகள் முழுவதையும் உரை ஆசிரியர் தொகுத்துக் காட்டுகின்றார். அவை யாவன.

| | | | |
|---|---|---|---|
| ‘பேரிகை | படகம் | இடக்கை | உடுக்கை |
| சீர்மிகு | மத்தளம் | சல்லிகை | கரடிகை |
| திமிலை | குடமுழா | தக்கை | கணப்பறை |
| தமருகம் | தண்ணும்மை | தாவில்தடாரி | |
| அந்தரி | முழவோடு | சந்திரவளையம் | |
| மொந்தை | முரசே | கண்டுவிடுதூம்பு | |
| நிசாளம் | துடிமை | சிறுபறை | அடக்கம் |
| மாசில் | தகுணிச்சம் | விரலேறுபாகம் | |
| தொக்க | உபாங்கம் | துடிபெறும் | பறையென |
| மிக்க | நூலோர் | விரிந்துரைத்தனரே’’ | |

பண்ணும் பாடலும், பருந்தும் அதன் நிழலும் போல என்று உரை ஆசிரியர் கூறுவார். அடியார்க்கு நல்லார் பண் என்பது இசை என்றும் பாடல் என்பது தாளத்தில் அமைந்தது என்றும் குறிப்பிடுகின்றார். தாளத்தில் அமைந்த பாடல்களுக்கு தோற்கருவிகள், கஞ்சக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இன்றைய வாழ்க்கையில் திருக்கோயில்கள் திருமணங்கள் முதலிய நிகழ்ச்சிகளில் மங்கல வாத்தியமாக தவில் பயன்படுத்தப்படுகிறது. தண்ணும்மை இசை அரங்கிற்கு பயன்படுகின்ற விதம் இன்றும் நிகழ்கிறது.

ஆகவே, தோற்கருவிகளில் தவில், பண்டைகாலத்தில் இருந்தே நாதஸ்வரத்திற்கு பயன்பட்டிருக்கிறது என்பதை இன்றும் திருக்கோயில்கள் சார்ந்து இருப்பதினால் அறியலாம். இதுபோலவே தண்ணும்மை பாடல் பாடுவதில் வல்லவர்கள் இசையோடு பாடும்பொழுது இசையரங்கில் வாசிக்கப்பட்டதை அன்றும், இன்றும் காணலாம்.

**ஆய்வு எல்லை**

மிருதங்கம் தவில் பற்றிய வரலாற்று செய்தியுடன் இவ்விரு கருவிகளைப் பற்றிய செய்திகளை ஒப்பாய்வு செய்வதே இவ்வாய்வின் எல்லையாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

**“மிருதங்கம் - தவில் ஓர் ஒப்பாய்வு”** என்ற தலைப்பில் மிருதங்கம் மற்றும் தவிலின் தோற்றம் வளர்ச்சி பற்றிய செய்திகளுடன் அதனின்

பல்வேறு நிலைகளையும் மரபுகளையும் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மிருதங்கம் தவில் தயாரிக்கும் முறைகள், பாடமுறைகள், கற்பித்தல் முறைகள், அரங்குகளில் வாசிக்கும் முறைகள், புதுவித உத்திகள் கலப்பிசை நிகழ்ச்சி போன்ற பல்வேறு விதமான ஆய்வு நிலைகள் விளக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் முன்னோடிகள்**

மிருதங்க இசை மரபு என்னும் தலைப்பில் முனைவர் மதுரை க.தியாகராஜன் அவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு சமர்ப்பித்த முனைவர் பட்ட ஆய்வேடு ஆய்வின் முன்னோடியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. முதுகலை பட்டத்திற்கான ஆய்வேட்டினை மங்கள நாயகி அவர்கள் 'தவில்' என்னும் தலைப்பில் சமர்ப்பித்துள்ளார். மேற்கூறிய கருவிகளின் ஒப்பாய்வாக இவ்வாய்வேடு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வேட்டில் தவில் மற்றும் மிருதங்கம் பற்றிய களஆய்வு தரவுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. தோற்க்கருவிகளை பற்றிய மேற் சொன்ன ஆய்வேடுகளில் குறிக்கப்படாத கருத்துக்கள் தரவுகளாக சேகரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்:**

இசை உலகில் மிருதங்கமும், தவிலும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. மிருதங்க இசையும், தவில் இசையும் தற்போது மிகச் சிறந்த அளவில் வளர்ந்து வந்துள்ளன. பண்டைய காலத்தில் இருந்து இக்காலம் வரை எந்த ஒரு இசைக் கருவியும் நாம் குருவின் மூலமாகத்தான் முழுமையாக கற்க முடியும். மற்ற பாடங்களைப் போல புத்தகத்தை பார்த்து நாம் பயில முடியாது. அக்காலத்திலிருந்து இக்காலம் வரை

எண்ணற்ற மிருதங்க வித்வான்கள் மற்றும் தவில் வித்வான்கள் நமக்காக பல பாடமுறைகளை விட்டுச்சென்றுள்ளார்கள். அவை இன்றும் குருவின் மூலமாகவே கற்கப்படுகின்றது. மிருதங்க வித்வான்களின் பாடங்களும், தவில் வித்வான்களின் பாடங்களும் அவர்களின் வாசிப்பு முறைகளும் பல புத்தகங்கள் வாயிலாகவும், இசைக் கலைஞர்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளப்படுகின்றன. தாள வாத்தியங்களில் உள்ள இருபெரும் பிரிவுகளை கொண்ட ஸ்ருதி சேர்க்கக்கூடிய வாத்தியமான மிருதங்கத்தையும், ஸ்ருதி சேர்க்க இயலாத தவிலினையும் பற்றி ஓர் ஒப்பாய்வு மேற்க்கொள்வதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் பயன்:**

தென் தமிழகத்தில் இசைக்கல்லூரிகள் இசைப்பள்ளிகள் ப்ரத்யேகமாக தவில் கற்பிப்பதற்கான இசைக்கல்லூரிகள் அரசாங்கத்தினாலும் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் நிறுவப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. மேற்கண்ட கலைகல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மிருதங்கம் மற்றும் தவில் முதன்மை பாடமாகவும், துணைப் பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளது. தவில் மற்றும் மிருதங்கம் படிக்கும் மாணவர்களுக்கு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். முற்காலத்தில் மிருதங்கம், தவில் ஒரு குருகுல முறையில்தான் கற்றுத் தரப்பட்டு வந்துள்ளது. அச்சமயத்தில் பாடம் கற்று கொள்வதோடு வாத்யத்தைப் பற்றிய நுணுக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் தற்போது இசை கல்லூரிகள் என்று வந்துள்ளபடியால் அதில் பாடங்களை

கற்பிக்க மட்டுமே நேரம் உள்ளது. வாத்யங்களின் வரலாறுகளையோ, அதனின் நுணுக்கங்களையோ அதனை செய்யும் முறைகளையோ, பராமரிக்கும் விதங்களையோ கற்றுக் கொள்வதற்கு பெரிதும் வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை. அதற்கு தனியாக புத்தொளி பயிற்சிகள் இசைப்பட்டறைகள், கருத்தரங்குகள், செயல்முறை விளக்க நிகழ்ச்சிகள் ஆகியவைகளை நடத்தியோ இதனை விளக்க வேண்டியுள்ளது. இருப்பினும் ஆய்வாளரின் மிருதங்கம் தவில் ஓர் ஒப்பாய்வு என்ற ஆய்வேடு வாத்யம் கற்கும் மாணவர்களுக்கு ஓரளவேனும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆய்வின் மூலமாக மேலும் பல ஆய்வுகளை விரிவாக மேற்கொள்வதற்கு வாய்ப்பும் உண்டு. என்னவென்றால், மிருதங்க வாசிப்பில் கணக்குகளும், தவில் வாசிப்பு கணக்கு முறைகளும் மிருதங்கம் மற்றும் தவிலுடன் இணைந்து வாசித்த கலப்பிசை (Fusion) நிகழ்ச்சி பற்றிய முறைகளும் இசை அரங்குகளில் மிருதங்கம், தவிலின் பங்கு, மிருதங்க வித்வான் வாழ்க்கை வரலாறு தவில் வித்வான் வாழ்க்கை வரலாறு போன்ற ஆய்வுகளுக்கு இந்த ஆய்வு பயன்பெறும் வகையில் இருக்கும் என நம்புகிறேன்.

**ஆய்வின் முந்தைய நிலை**

மிருதங்கம், தவில் பற்றிய செய்திகள் சிறு சிறு கட்டுரை வடிவமாகவும், மாத இசை இதழ்களிலும் ஆண்டு மலர்களிலும் சிறப்பு கட்டுரைகளிலும், ஆய்வேடுகளிலும் செய்திகள் பல வந்திருக்கின்றன. இருந்த போதிலும் இரண்டு லய வாத்யங்களை மற்றும் இரண்டு

தோற்க்கருவிகளை இணைத்து ஒப்பாய்வு செய்ததற்கான எந்த ஒரு நூலும் காணப்படவில்லை.

**ஆய்வுமுறை**

நூலகங்கள் மூலமாக பல நூல்களைக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. எனவே நூலக ஆய்வாகவும் கோயில்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் நேர்காணல் மூலம் இவ்வாய்வு களஆய்வாகவும் மேற்க்கொள்ளப்பட்டு தொகுப்பாய்வாகவும் பகுப்பாய்வாகவும் செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுபகுப்பு**

**முன்னுரை:**

## இயல் -1
## இலக்கியம், கல்வெட்டு, சிற்பங்கள், இசை உருக்களில் மிருதங்கம், மற்றும் தவில் பற்றிய குறிப்புகள் :

மிருதங்கம் மற்றும் தவில் பற்றி புராணங்களில் கிடைத்த செய்திகள் மிருதங்கம் பற்றி சங்க இலக்கியங்களிலும் மேலும் காப்பியங்களிலும் பதிகம் மற்றும் பாசுரங்களில் மிருதங்கம் பற்றிய செய்திகள் மேலும் நாச்சியார் திருமொழி மற்றும் கல்வெட்டுக்களிலும் சிற்பங்களிலும் உள்ள மிருதங்கம் பற்றிய செய்திகள் விரிவாக எடுத்துரைக்கப்பபட்டுள்ளது. இதற்குபின் தவிலாகிய தோற்க்கருவியின் வளர்ச்சி பற்றியும்

நிகண்டுகளிலும், ஆகமங்களிலும் தவில் பற்றிய குறிப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ். இசைஉருக்கள், திருப்புகழிலும் தவில் பற்றிய செய்திகள் பற்றி கூறப்பட்டுள்ளது. மேலும் தவிலின் முன்னோடி வாத்யமான டிண்டிமம், பேரி போன்ற வாத்யங்களை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. இறுதியாக கல்வெட்டு செய்திகள் சிற்பங்களில் உள்ள செய்திகளும் கூறப்பட்டுள்ளது. மேலும் மிருதங்கம் பற்றி கிடைத்த செவி வழிச்செய்திகளும் கூறப்பட்டுள்ளது. இறுதியில் மிருதங்கம் தவில் தோற்றம் வளர்ச்சியின் ஒப்பாய்வு பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## இயல் -2

## மிருதங்கம், தவில் உருவாக்கும் முறை

மிருதங்கத்தை தயார் செய்யும் முறையில் மிருதங்கத்தில் பயன்படுத்தப்பட்ட மரம், அந்த மரக்கட்டையை எவ்வாறு பதப்படுத்துதல் இடந்தலை, வலந்தலை எவ்வாறு செய்தல், மிருதங்கத்தின் வார் எவ்வாறு தயார் செய்யப்படுகிறது, மிருதங்கத்தின் அளவுகள், அதில் பயன்படுத்தப்படும் புள் மற்றும் ஸ்ருதி சேர்க்கும் கல் மிருதங்கத்தில் பயன்படுத்தப்படும் தோல் போன்றவற்றை பற்றிய விவரங்கள் விளக்கப்பட்டுள்ளது. அதே போல் தவில் தயார் செய்யும் முறையில் தவிலின் தோல் மற்றும் இடந்தலை, வலந்தலை வளையம், தவிலின் கண்கள் , தவிலில் பயன்படுத்தப்படும் வார் , தவிலில் பயன்படுத்தப்படும்

கட்டை, தவிலின் அளவுகள் மற்றும் தவிலில் பயன்படுத்தப்படும் பிற உபகரணங்கள் தவிலில் ஸ்ருதி சேர்க்கும் முறை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.. இறுதியாக மிருதங்கம், தவில் தயாரிப்பு முறையில் ஒப்பாய்வு பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

## இயல் - 3

## மிருதங்கம் மற்றும் தவில் பாடம் மற்றும் பயில்முறைகள்

மிருதங்கம் மற்றும் தவில் பாடமுறையில் முதலாவதாக குருகுலம் பற்றியும், மிருதங்கம் மற்றும் தவிலில் வாசிக்கப்படும் பிள்ளையார் பாடம் பற்றியும் பின்பு மிருதங்கம், தவிலின் அடிப்படை பாடங்கள் மேலும் மிருதங்கம் தவிலின் பாடங்களில் ஒற்றுமை, வேற்றுமை பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

இறுதியாக மிருதங்கம், தவில் பாடங்களின் ஒப்பாய்வு பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

## இயல் - 4

## மிருதங்கம் மற்றும் தவில் வாசிப்பு முறைகள்

மிருதங்கத்தை பொறுத்தவரை வாய்ப்பாட்டிற்கு எவ்வாறு மிருதங்கம் வாசிப்பது, அதே போல் தனி ஆவர்த்தனம், கருவி இசை, பரதநாட்டியம்,

போன்றவற்றிற்கு எவ்வாறு மிருதங்கம் வாசிப்பது. மேலும் தவில் மற்றும் மிருதங்கம் வாசிப்பு முறையில் ஏற்பட்ட மாற்றம் போன்றவற்றை பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதே போல் தவில் வாசிப்பு முறையை பற்றி பார்க்கும்போது நாதஸ்வரத்திற்கு எவ்வாறு தவில் வாசிப்பது, மற்றும் தனித்தவில் வாசிப்பு முறை தவிலில் வாசிக்கப்படும் நவசந்திதாளம் மற்றும் நையாண்டி மேளம் நையாண்டி மேளத்தில் கரகாட்டமாகிய குடக்கூத்து பற்றியும் அதேபோல் பாட்டிற்கு எவ்வாறு தவில் வாசிப்பது மேலும் குடக்கூத்திற்கு மத்தளம் வாசித்தது போன்றவற்றை பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது. இதன் இறுதியாக மிருதங்கம், தவில் வாசிப்பு முறையில் ஒப்பாய்வு பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது..

## இயல் -5

## மிருதங்கம் மற்றும் தவில் வாத்திய அமைப்பிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் உள்ள புதுவிதஉத்திகள்

முதலாவதாக மிருதங்கம் மற்றும் தவிலின் கட்டமைப்பு வளர்ச்சி மிருதங்கத்தில் பயன்படுத்தப்படும் கயிறு, பட்டைவார், பசை மற்றும் பரிணாம வளர்ச்சியில் மிருதங்கத்தில் பயன்படுத்தப்படும் பிற உபகரணங்கள் அதே போல் தவிலில் பயன்படுத்தப்படும் எ்.கு பட்டை இடந்தலை, வலந்தலை வளையம் மேலும் தவில் வாத்தியத்தில் ஏற்பட்ட மாற்றம் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. இதன் பின்பு தவில், மிருதங்கம் வாத்ய அமைப்பில் உள்ள ஒப்பாய்வு பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

அதன்பின் நிகழ்ச்சிகளில் தற்போது வாசிக்கப்பட்டு வரும் புதுவித உத்திகள் மேலும் மிருதங்கம் கற்றுக்கொண்டு வாசிக்கும் மாற்று திறனாளிகள் மற்றும் தவில் கற்றுக்கொண்டு வாசிக்கும் வேறு இனத்தார்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கு பிறகு நிகழ்ச்சிகள் மற்றும் புதுவிதஉத்திகளில் உள்ள ஒப்பாய்வு பற்றி விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

## இயல் -6

## மிருதங்கம் மற்றும் தவிலின் வளர்ச்சி மாற்றத்திற்கு தொண்டாற்றிய வித்வான்கள்

இந்த இயலில் மிருதங்கம், மற்றும் தவில் வித்வான்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றையும் அவர்கள் இசைக்கு செய்த தொண்டினையும் பற்றி விளக்கி கூறப்பட்டுள்ளது. மேலும் இறுதியாக மிருதங்கம், தவில் வளர்ச்சி, மாற்றம் பற்றிய ஓர் ஒப்பாய்வாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பண்டை தமிழர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் அறிந்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். இந்த நான்கையும் போற்றி வளர்த்தவர்கள் தமிழ் மன்னர்கள் ஆவார். முத்தமிழ் என்று வழங்குகின்ற தமிழ் இலக்கியம் இன்று இசையும் நாடகமும் ஒழிய இயற்றமிழ் பாக்கள் அமைந்த நூல்களே கிடைத்திருக்கின்றன. ஆனால் சமணர் பௌத்தர் மதங்கள் வருகைக்கு முன்பு முத்தமிழும் சிறப்பாக இருந்திருக்கின்றன. வருகை தந்த மதவாதிகளை போற்றிய தமிழ் மக்கள் அவர்கள் விருப்பப்படி காமச்சுவையை விளைவிக்கும் இசையையும் நாடகத்தையும்

புறம் தள்ளினர். இதற்கு சமண மதத்திலும் இசை நாடகம் தவிர்க்கப்பட்டது. அது பற்றிய நூல்களெல்லாம் படிப்பாறற்று அழிந்து போய்விட்டன. அழிந்துபோன நூல்களின் பெயர்கள் மட்டும் சிலப்பதிகார உரையின் மூலம் தெரிய வருகின்றன. பண்டை தமிழர்கள் ஆடல் பாடலை பக்கவாத்தியத்தோடு போற்றி வளர்த்ததை அகநானூறு 352-ம் பாடல் தெளிவுபடுத்துகிறது.

தமிழர் வாழ்க்கையில் இசையும் இசையமைந்த பாடலும் அதற்குரிய தோற்க்கருவிகளும் பண்டை காலத்தில் சிறப்பாக நிலவின. இடைக்காலத்தில் தொய்வு ஏற்பட்டு இருந்தாலும் பக்தி இயக்கம் தோன்றிய பிறகு இசைக்கலை மெய் ஞானத்தை உணர்த்துவதற்கு முழுதும் பயன்பட்டது என்பதனை சேக்கிழார் பெரியபுராணத்தில் பதிவு செய்கிறார். இப்பக்தி இயக்கத்தில் தோற்க்கருவிகள் பயன்பட்டதனை காரைக்கால் அம்மையார் பாடல்மூலம் அறியலாம். அதுபோல ஆழ்வார் பாடல்கள், நாயன்மார் பாடல்களின் மூலம் தோற்க்கருவியின் பெருமையை அறியலாம். இவை பற்றிய விரிவான விளக்கங்களை முன்பு கண்டுள்ளோம். இன்றும் இசையரங்குகளில் தண்ணும்மை பக்கவாத்யமாக பயன்பட்டு சிறப்பிக்கப்படுவதுபோல் மணவிழாவிலும், கோவில் விழாக்களிலும் தவில் நாதஸ்வரம் இன்றும் பயன்பட்டு வாழ்க்கைக்கு வழிகாட்டி வருகின்றன. காவடியாட்டம் முதலிய சிறு தெய்வ விழாக்களில் ஏகதாளத்தில் தவில் வாசிக்கப்பட்டு வருவதையும் செவியுறுகிறோம். தவிலினுடைய ஓசை இன்பத்தையும் கடவுள் இருப்பையும் மனதில் நிறுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று திருநீலகண்ட யாழ்பாணருடைய வரலாற்றில் தெரியவருகிறது. பண்டை காலத்தில் குமரி

கண்டத்தில் மக்கள் வாழ்ந்ததாகவும், பெரிய கடல்கோளால் அக்கண்டம் அழிந்து இலங்கை தனியாக பிரிந்தது என்றும், லாஸ்ட் லெமூரியா (Last Lemuria) என்ற நூலில் வின்சென்ட்சுமித் (Vincent Sumith) பதிவு செய்கிறார். அந்த இலங்கையில் ஓர் நாடே யாழ்ப்பாணம் என்று இன்றும் வழங்குகிறது. இசையிலும் கூத்திலும் தோற்க்கருவி வாசிப்பிலும் வல்லவர்களான பண்டைதமிழர்கள் இப்பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது ஆய்வாளரின் கருத்து. ஆகவே பழங்காலத்தில் இருந்தே பல்வேறு பக்கவாத்ய இசைக்கருவிகளைப் பற்றி காரைக்கால் அம்மையார்தான் மூத்த திருப்பகத்தில் பதிவு செய்கிறார். சிலப்பதிகாரத்திலும் அரங்கேற்று காதையிலும் தோற்கருவிகளை விவரிக்கும் போது தண்ணும்மைக்கு முதலிடம் கொடுக்கின்றார். இதற்கு பிறகு திருப்புகழில் தவில் பதிவு செய்யப்படுகிறது. இவை அநேகமாக அகநானூற்றில் கூறிய முழவின் பரிணாம வளர்ச்சியாக இருக்கலாம். முழவு ஆடல் பாடலுக்கு பயன்பட்டிருக்க வேண்டும். தண்ணும்மை இசை அமைதி உடையது. அதற்கு முதலிடம் இசையரங்கில் கொடுக்கப்பட்டது. இசையமைதி இல்லாத முழவினுடைய மறுபிறப்பாக தவில் பக்தி இயக்க காலத்தில் வளர்ந்து பரிணாமமாகி இருக்க வேண்டும் என்பது ஆய்வின் மூலமாக தெரியவருகிறது.

ஆகவே தமிழரின் தோற்கருவிகளுள் தண்ணும்மை எனப்படும் மிருதங்கமும் தவிலும் தற்பொழுது வரை எந்த அளவிற்கு இசை உலகில் தன்னிறைவு பெற்று தனிப்பெரும் கருவியாக நிலைத்து நிற்கின்றது என்று ஆராயப்பட்டுள்ளது.